## “சர்வதேச மாடல்” ஆக பரிணாமம் பெற்ற

# “திராவிட மாடல்” தமிழ்நாட்டில் வளர்ச்சி பெற்று, வென்று நிற்பது எப்படி?

## ‘தி வயர்’ இணைய தளத்தில் ராஜன் குறை கிருஷ்ணன் விளக்கம்

சுரண்டல் பார்ப்பனிய சமூக அமைப்புக்கு எதிரான மக்களின் எதிர்வினை வெளிப்பாடுகளுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் திராவிட மாடல் தேர்தல் ஜனநாயக அடித்தளத்தில் மக்களுக்கு புதிய சமத்துவ உணர்வை உருவாக்கியது. அந்த வகையில், அ.கலையரசன், எம். விஜயபாஸ்கரின் திராவிட மாடல் புத்தகத்தில் உள்ள கருத்தியலை இங்கே சிந்தனைக்கு அளிக்கிறேன்.

தமிழ்நாட்டின் அரசியல் பொருளாதாரத்தைப் பார்த்தால் ஒரு கருத்தியலுக்கு மத்தியில் இருப்பவர்கள் அதன் மறுபக்கத்திலிருந்து வந்தவர்களைச் சந்திப்பது போல உணர முடிகிறது. மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இந்த புத்தகத்தில் தமிழ்நாட்டின் வளர்ச்சிக் குறிகாட்டிகள் குறித்த கடினமான தரவுகள், முழுமையான நுண்ணறிவுத் தொகுப்பாக தரப்பட்டுள்ளது. அவை அரசியல் செயல்பாடுகளுக்கான காரண காரிய விளக்கமாகவும் இருக்கிறது. அதை நூலாசிரியர்கள் அறிவார்ந்தவர்களும், மற்றவர்களும் ஆர்வத்துடன் அறிந்து கொள்ளும் விதத்தில் அளித்துள்ளனர்.

**மாறுபட்ட துணை தேசியம் தமிழ் தேசியம்**

திராவிட மாடல் இந்தியாவிற்குள் ஒரு முக்கியமான மாறுபட்ட துணை தேசியமாக அமைந்து, அரசியல் ரீதியான அணிதிரட்டும் செயல்முறைகளை முன்னெடுத்து ஒருங்கிணைந்த வளர்ச்சி என்ற வலுவான வாதத்தை முன் வைத்து நடந்து செல்கிறது. ‘திராவிடம்’ என்ற அடைமொழி, திராவிட தமிழ் அடையாளம் என்ற பரந்த சமத்துவமும், சாதி எதிர்ப்பும், சமூகநீதிக் கருப்பொருள்களின் அடிப்படையிலும் திராவிட முன்னேற்றக் கழகம் மக்களை ஓரணியில் திரட்டியது. கழகம் 1967ல் ஆட்சிக்கு வந்ததும், ‘திராவிட’ அரசாக, திட்டமிடல், விநியோகம் உள்ளிட்ட நிர்வாகத்தின் அன்றாட அம்சங்களை மையமாகக் கொண்டு முக்கிய கொள்கை முடிவுகளை மேற்கொண்டது. அவ்வகையில் திராவிட மாடல் ஆய்வு செய்வதற்குரிய தகுதியைப் பெறுகிறது.

தமிழ்நாட்டில் தி.மு.க அரசும், அ.தி.மு.க.வும் மாறிமாறி ஆட்சியில் இருந்த நிலையில், தி.மு.க.வின் கொள்கைகளை கடைபிடித்தல் மற்றும் மற்ற கட்சியை ஒப்பிடும்போது அதில் உள்ள மாறுபாடுகள் ஆகியவை புத்தகத்தில் திரும்பத்திரும்ப வலியுறுத்தப்படுகிறது. இரு கட்சிகளின் ஆட்சி, அதன் வளர்ச்சி மற்றும் விளைவுகள் ஆகியவை எட்டு சுருக்கமான அத்தியாயங்களில் புத்தகத்தில் நன்றாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

முதல் அத்தியாயம் மாறுபட்ட துணை தேசிய வகையை ஆய்வு செய்ய வேண்டியதன் அவசியத்தை முன்வைக்கிறது. 1960-61 ஆம் ஆண்டில் தேசிய சராசரியை ஒட்டி இருந்த தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் 2010-11 ஆம் ஆண்டில் தேசிய சராசரி அளவிலிருந்து 150% க்கும் அதிகமாக ஆனது. அதே நேரத்தில், கிராமப்புற மற்றும் நகர்ப்புற வறுமை விகித குறைப்பும் வியத்தகு அளவில் இருந்தது. தேசிய சராசரியை விட அது அதிகமாக இருந்த நிலையில், அதிக தனிநபர் வருமானத்தைப் பதிவு செய்யும் மகாராஷ்டிரா மற்றும் குஜராத்தை விடக் குறைவாக, நாட்டிலேயே மூன்றாவது குறைந்த இடத்தில் உள்ளது. எனவே ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதன் மூலம் பொருளாதார வளர்ச்சி திராவிட தமிழ் என்ற மாறுபட்ட துணை தேசியம் ஒரு பயனுள்ள ஆய்வுப் பொருளாகிறது.

இரண்டாவது அத்தியாயம், மறுபகிர்வு என்ற ஒரு குறிப்பிடத்தக்க பொதுப்பார்வையை வளர்த்தெடுத்த அரசியல் மூலம் அணி சேர்த்தல் என்பது பற்றி ஒரு விரிவான கோட்பாட்டை விளக்கும் பார்வையை அளிக்கிறது. அது சாமானிய மக்களின் உரிமை என்ற உணர்வை மறுபகிர்வு செய்யும் அரசியல் நெறிமுறையாகவும் ஆனது.

மூன்றாவது மற்றும் நான்காவது அத்தியாயங்கள் கல்வி மற்றும் சுகாதாரத்தில் அடைந்த முன்னேற்றங்களை வெளிப்படுகின்றன.

மற்ற இந்திய மாநிலங்களுடன் ஒப்பிடும்போது முக்கியமான துறைகளில் முன்மாதிரியாக நிகழ்த்தப்பட்ட சாதனைகளை அவை சொல்கின்றன.

ஐந்தாவது ஒரு முக்கியமான அத்தியாயம். மூலதன வளர்ச்சி மற்றும் ஜனநாயக மயமாக்கலின் பரந்த அடித்தளம் பற்றிப் பேசுகிறது. அதைத் தொடர்ந்து ஆறாவது மற்றும் ஏழாவது அத்தியாயங்களில் கிராமப்புற மாற்றம் மற்றும் நகர்ப்புற தொழிலாளர் பற்றிய ஆய்வும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இறுதி அத்தியாயம், திராவிட மாடல் செயலாக்க முறைகளில் உள்ள வரம்புகள் மற்றும் சிக்கல்களைப் பற்றி குறிப்பிடுகிறது. அதில் ஒரு சீரான பார்வையைப் பெறுகிறோம். பகுத்தறிவு சமத்துவவாதி ரோசன்வல்லன் என்பவரால் பரிந்துரைக்கப்பட்ட உயர்மட்ட ஆட்சியாளர்கள் தங்கள் அடையாளத்தை அவசியமாக்கும் நிலைப்பாடு போல, வரம்புகள் மீதான அவர்கள் கவனம் சில சமயம் வெளிப்படையாக இல்லாமல், தேவையற்றதாக தோன்றுகிறது. அனுபவத் தரவுகள் அல்லது இதர ஆதாரங்கள் அளிப்பதன் மூலம் அது பரிந்துரை செய்யப்படவில்லை.

தமிழ்நாட்டின் சூழலில், திராவிட மாடலை ஒழிக்க முனைந்த சாதி அமைப்பின் மேலாதிக்கம் மற்றும் கருத்தியல் தாக்கங்களில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, சாதி என்ற அடையாளத்தின் அனுபவ நடைமுறைகளை படிப்படியாக குறைக்கவும், அதை ஒழுங்குபடுத்துவதையும் மட்டும் அது சுட்டிக்காட்டுகிறது. இது புத்தகத்தின் மறைமுகக் கருப்பொருளாகவும் அமைந்துள்ளது. இந்த கருப்பொருள் உண்மையில் தாமஸ் பிக்கெட்டி என்ற பொருளாதார வல்லுநரின் உலகளாவிய அளவில் மேற்கொள்ளப்பட்ட மூலதனம் மற்றும் கருத்தியலோடு மிக விரிவாக இயைந்து வருகிறது.

**உள்ளூர் வரலாறு உலகளாவிய வடிவமைப்பு**

உலக வரலாற்று மாற்றங்களில் மானுடவியல், கட்டமைப்பு செயல்பாட்டு பரிமாணங்கள் குறித்து பொருளியல் வல்லுநர் தாமஸ் பிக்கெட்டியின் பிரம்மாண்டமான பார்வைகளுடன் இணைந்து திராவிட மாடல், மூலதனம் மற்றும் கருத்தியல் என்ற தலைப்பில் பொருத்தமாக குறிப்பிடப்படுகிறது. வளர்ச்சிக் குறியீடுகளுடன் ஒப்பீடு என்பது திராவிட மாடலானது மற்ற இந்திய மாநிலங்களை விட முதன்மையான செயல்திறனுடன் இருப்பதை காட்டுகிறது. திராவிட அரசியல் பொருளாதார கருத்தியல் அடிப்படைகள் குறித்த ஆய்வு, பொருளியல் வல்லுநர் பிக்கெட்டி உருவாக்கிய முன்னுதாரண ஆய்வுகள் மூலம் எடுத்துரைக்கப்படுகிறது.



**ராஜன் குறை கிருஷ்ணன்**
டெல்லி அம்பேத்கர்
பல்கலைக்கழக பேராசிரியர்

திராவிட மாடல் என்பது மூலதனம் மற்றும் கருத்தியலை முன்வைக்கும் நிலையில், அனுபவ ரீதியாகவும், கருத்தியல் ரீதியாகவும் தமிழ்நாட்டு வளர்ச்சியில் கவனம் செலுத்துவதால் அதை வெறும் கருத்தியலாக மட்டுமே விட்டு வைக்கவில்லை. அந்த வகையில், மூலதனம் மற்றும் கருத்தியலை உலகளவில் பகுப்பாய்வு செய்து அவற்றின் ஐரோப்பிய படிநிலைகள் பற்றியும் அறிந்த பொருளியல் வல்லுநர் பிக்கெட்டி இந்தியா, சீனா மற்றும் உலகின் பிற பகுதிகளில் அவற்றில் உள்ள மாறுபாடுகள் மீது கவனம் செலுத்துகிறார்.

நிக்கோலஸ் டிர்க்ஸ் படைப்புகள், அமர்த்தியா சென் மற்றும் ஜீன் ட்ரீஸ் ஆகியோரைக் குறிப்பிடுவதன் மூலம் இந்தியாவின் பின்காலனித்துவ வளர்ச்சி, வரலாற்றின் துணை தேசிய வேறுபாடுகளை ஆய்வு செய்த பொருளியல் வல்லுநர் பிக்கெட்டி தமிழ்நாட்டையும், பெரியாரையும் குறிப்பிட்டுக்காட்டுகிறார். அவர் கேரளாவை ஒரு எடுத்துக்காட்டு மேற்கோளாக மட்டும் வைக்கிறார். அவ்வகையில், உலகளாவிய மாற்றத்தை உருவாக்கும் செயல்முறைகளில் பெரியாரால் வெளிப்படுத்தப்பட்ட திராவிட மாடல், அவரது பகுத்தறிவு அடிப்படையிலான கட்டமைப்பை சிறப்பாக வெளிப்படுத்தியது. எனவே, திராவிட மாடல், அதன் மூலதனம் மற்றும் கருத்தியல் ஆகியவற்றை ஒரே நேரத்தில் படித்துணர வேண்டும்.

அது எதற்காக என்பதை சுருக்கமாக குறிப்பிடுகிறேன்.

துணை தேசிய வகையான தமிழ் தேசியம் மூலம் தமிழ்நாட்டில் வளர்ச்சிக்கான பாதைகள் ஏற்படுத்தப்பட்டன என்பதை திராவிட அரசியல் சித்தாந்தத்தில் விளைந்த திராவிட மாடல் வெளிக்காட்டியுள்ளது. அப்படிப்பட்ட துணை தேசிய வகை உலகெங்கிலும் காணப்படுவதுடன், அதிகரித்து வரும் சமத்துவமின்மை என்ற போக்கை குறைத்து, பயன்மிகு நடவடிக்கைகள் மூலம் அதை பொதுவெளியில் மறுபகிர்வு செய்வதையும் உறுதிப் படுத்துகிறது.

இந்த நிகழ்முறையை பொருளியல் வல்லுநர் பிக்கெட்டி பயன்படுத்தும் முதலாளித்துவ மாற்றம் என்ற முன்னுதாரண வகையில் சொல்ல வேண்டுமானால், மதவாதிகள் மற்றும் ஜமீன்தார்கள் மட்டுமே ஆதிக்கம் செலுத்தும் சமூகத்தை, பொது உடைமைச் சமூகமாக மாற்றுவதில் திராவிட இயக்கம் முன்னின்றது என்றே கூறலாம். அதன் விளைவாக சமூக நீதியுடன் கூடிய ஜனநாயகம் உருவாகி, சமத்துவமின்மை படிப்படியாக அகற்றப்பட்டது.

திராவிடல் மாடல் கருத்தாக்கம் மத ரீதியான கருத்தியலுக்கு எதிராக இடதுசாரி பொதுவுடமை வாதத்தை உருவாக்கியதன் மூலம் நவீன தமிழ்நாட்டின் ஆரம்ப மற்றும் இடைக்கால வரலாற்றில் ஆரிய பிராமண உயர் சாதி குடியினர் சாதியின் பெயரால் கட்டமைத்த சுரண்டும் சமூக கட்டமைப்பை அகற்றி, சமூகத்தை பாதுகாத்தது எனலாம்.

சுரண்டல் பார்ப்பனிய சமூக கட்டமைப்புக்கு எதிராக வெளிப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் உணர்வுகளின் வெளிப்பாடுகளுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் பொருளியல் வல்லுநர் பிக்கெட்டியின் சொற்களில் குறிப்பிடுவதென்றால், மதவாதிகள், உயர்குடியினர் மற்றும் விவசாய கூலிகள் அடங்கிய சமூகத்தில் நிலை தாழ்த்தப்பட்ட, உரிமை மறுக்கப்பட்டவர்களின் பொருளாதார வளர்ச்சி மற்றும் அரசு நிர்வாகத்தில் நியாயமாக அவர்கள் பங்கேற்கும் வகையில், திராவிட மாடலானது தேர்தல் ஜனநாயக முறையின் அடித்தளமாக அமைந்து, சமநீதி என்ற ஒரு புதிய பொது உணர்வை உருவாக்கியது.

அது இன்னும் வளர்ந்து, அரசு நடவடிக்கைகள் மூலம் அவர்களுக்கான தாராளவாத சித்தாந்தத்தையும் திறம்பட எதிர்கொள்ளும் திராவிடம் என்ற சொல் பார்ப்பன சாதியக் கருத்தியலை மறுதலிப்பதைக் குறிப்பதால் தான் அது சாத்தியமானது. திராவிட அரசியல் தகர்க்க முனைந்த ஆரியவாதத்தின் மிகவும் பழமையான நான்காம் கட்ட சமூகத்திற்கு எதிராக உருவாக்கப்பட்ட விமர்சனச் சொற்றொடர்களான உலகமயமாக்கல், தாராளமயமாக்கல் ஆகியவை சமூக நீதியை எதிர்நோக்கி நிற்கும் மக்களுக்கான அரசியலைத் தொடர்ந்து உயிர்ப்பித்துக் கொண்டிருக்கிறது. இந்தப் பகுப்பாய்வு திராவிட மாடலின் சமூகப் பங்களிப்பை வெளிப்படுத்துகிறது.

பொருளியலாளர் பிக்கெட்டி, சமூக நீதியை சட்டபூர்வமாக்குவதற்கு அடிப்படையான ஆதிக்க சாதியினக் குழுக்கள் குறித்த பல்வேறு கோட்பாடுகளைப் பட்டியலிடுகிறார். “... இந்தியாவில் உயர்குடியினர் ஆரிய வம்சாவளியினராகவும், சாமானிய மக்கள் திராவிடர்கள் என்றும் கூறப்பட்டது...” என்று குறிப்பிட்ட அவர் இந்த இடத்தில் திராவிட மாடல் தனது பங்களிப்பை துல்லியமாக கணித்து சரியாகச் செய்ததாகவும் குறிப்பிடுகிறார்.

இருப்பினும், தேர்தல் ஜனநாயக முறையில் தற்போதைய கருத்தியல் பிளவுகளான ‘இடது சாரி பிராமணவாதம்’ மற்றும் ‘வலதுசாரி வர்த்தகம்’ ஆகியவற்றுக்கு இடையில் சிக்கலான தொடர்பை, பொருளியலாளர் பிக்கெட்டியின் நிலைப்பாட்டில் விவரிக்கும்போது புதிரான தொடர்பு ஏற்படுகிறது. பழைய சமூகத்தில் பிராமணர் என்ற சொல் மதகுரு அல்லது புரோகித வர்க்க செயல்பாட்டைக் குறிக்கவோ அல்லது பரம்பரை ரீதியாக பெறப்பட்ட உரிமைகளின் தொகுப்பாகவோ அவர் பயன்படுத்தவில்லை. படித்த, அறிவார்ந்த வர்க்கமாக அது பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கருதப்படும் தொழிலாளர் வர்க்கத்திலிருந்து இடதுசாரிகள் அந்நியப்படுத்தப்படுவதைச் சுட்டிக்காட்ட அவர் அதைப் பயன்படுத்துகிறார்.

திராவிட மாடல் சரியாக சுட்டிக்காட்டுவது போல, எர்ன்ஸ்டோ லாக்லாவ் மற்றும் சாண்டல் மௌஃபே ஆகியோர் இடதுசாரி ஜனநாயகவாத அழைப்பு விடுப்பதற்கு அதுதான் காரணம்.

பரந்த மக்களிடையே பகுத்தறிவு வாதம் எந்தளவு மாற்றத்தை ஏற்படுத்தியது என்ற கேள்விக்கான அனுபவ மற்றும் கருத்தியல் அடித்தளத்தையும், இடதுசாரிகளை பார்ப்பனமயத்திலிருந்து விடுவிப்பதில் திராவிட மாடல் எந்த அளவுக்கு வெற்றி பெற்றுள்ளது என்பதையும் திராவிட மாடல் கச்சிதமாக கட்டமைத்துள்ளது.

பொருளியலாளரான பிக்கெட்டியின் சூத்திரப்படி, தேசிய அரசுகளின் ஏகாதிபத்திய வணிகவாதத்திற்கு எதிராக திராவிட மாடலானது சோசலிசகூட்டாட்சி முறையில் உலகளாவிய நிலைத்தன்மை யை ஏற்று அங்கீகரித்துள்ளது. திராவிட மாடல், மூலதனம் மற்றும் கருத்தியல் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வாசிப்பு மூலம் திராவிடக் கருத்தியல் திறன் பற்றிய எதிர்கால ஆராய்ச்சிக்கு இது மேலும் ஊக்கமளிக்கும் என்று நம்புகிறேன்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சென்னை மெரினா கடற்கரையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 7வது ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன் ஸ்ஷிப்2023 ”பொம்மன் இலச்சினை (Bomman Mascot) அறிமுகம் செய்தார். இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் .மா.சுப்பிரமணியன் , இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமை செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி, ஹாக்கி இந்தியா தலைவர் டாக்டர் திலிப் டார்க்கி, செய லாளர். போலோநாத்சிங், பொருளாளர் சேகர்மனோகரன், மற்றும் ஒலிம்பியன் பாஸ்கரன், கோவிந்தா, முகமது ரியாஸ் ஆகியோர் உடன் உள்ளனர்.

## காவிரி டெல்டா மண்டலத்தில் பாசறைக் கூட்டம்! பேருரையாற்ற வருகை தரும்

# கழகத் தலைவரை வரவேற்று – திருச்சியில் பிரம்மாண்ட கூட்ட ஏற்பாடுகள்!

## கழக முதன்மைச் செயலாளர் கே.என். நேரு அறிவிப்பு

திருச்சி, ஜூலை 22-
கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு திமுக சார்பில் திருச்சியில் வருகின்ற 26 ஆம் தேதி ஒரு நாள் சிறப்பு பயிற்சி முகாம் முதல்வர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

தமிழ்நாடு முழுவதும் உள்ள 5 மண்டலங்களிலும், வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கான ஒருநாள் பயிற்சி பாசறைக் கூட்டத்தை நடத்த தி.மு.க. திட்டமிட்டுள்ளது. இதன் ஒருபகுதியாக டெல்டா மண்டலத்திற்கான கூட்டம் இம்மாதம் 26 ஆம் தேதி திருச்சியில் நடைபெறவுள்ளது.

திருச்சிக்கு வரும் 26 மற்றும் 27 ஆகிய இரண்டு நாட்கள் பயணமாக முதல்வர் வரவுள்ளார். இவர் ஒரு நாள் பாசறைக்கூட்டத்தில் பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்.

இக்கூட்டத்தில், அரியலூர், பெரம்பலூர், கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சை வடக்கு, தஞ்சை மத்திய, தஞ்சை தெற்கு, திருச்சி தெற்கு, மத்திய, வடக்கு, புதுக்கோட்டை தெற்கு, வடக்கு ஆகிய 15 மாவட்டங்களின் தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் மற்றும் இந்த மாவட்டத்துக்குட்பட்ட வாக்குச்சாவடி தி.மு.க. பொறுப்பாளர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

இதனையொட்டி திருச்சி ராம்ஜிநகர், பகுதியில் கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிருவாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு தலைமையில் விழா மேடை மற்றும் பந்தல்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் இன்று விழாவிற்கான ஏற்பாடு பணிகளை அமைச்சர் கே.என்.நேரு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதனைத் தொடர்ந்து திருச்சி திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள கேர் கல்லூரியில் விவசாயிகளுக்கான வேளாண் சங்கமம் 2023 என்ற தலைப்பின் கீழ் மாநில அளவிலான கண்காட்சி நடைபெற உள்ள இடத்தையும் அமைச்சர் கே.என்.நேரு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் கூறுகையில்...

வருகின்ற 26 ஆம் தேதி காலை 11மணிக்கு சென்னையிலிருந்து தமிழக முதல்வர் விமான மூலம் புறப்பட்டு திருச்சிக்கு வருகை தர உள்ளார்.

அதனைத் தொடர்ந்து வருகின்ற பாராளுமன்ற தேர்தலை எப்படி எதிர்கொள்வது என்பது குறித்து ஆலோசிக்க மூத்த வழக்கறிஞர்கள் முதல்வரை சந்திக்க உள்ளனர்.

மாலை 4 மணிக்கு 15 மாவட்டங்களை சேர்ந்த இரண்டாம் நிலை தேர்தல் பூத் கமிட்டி அலுவலர்களுடன் கலந்துரையாடி இறுதியாக உரையாற்ற உள்ளார்.

27 ஆம் தேதி காலை 9 மணிக்கு விவசாயி களுக்கான, வேளாண் சங்கமம் என்ற தலைமப்பிலான மாநிலம் அளவிலான கண்காட்சியை முதல்வர் தொடங்கி வைக்க உள்ளார்.

முதல்வருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க விவசாயிகள் ஏற்பாடு செய்துள்ளனர்.



மேலும் விவசாயிகள் இன்றைய நவீன காலகட்டத்தில் எப்படி விவசாய உபகரணங்களை பயன்படுத்தி விவசாயத்தை மேம்படுத்துவது என்பது குறித்த பல்வேறு உபகரண கண்காட்சிகள் இடம்பெற்றுள்ளது.

இதுவரை தனியார் நிறுவனங்கள் மட்டுமே நடத்திய கண்காட்சி முதல் முறையாக தமிழக அரசு முன் நின்று இந்த விவசாய உபகரணங்கள் கண்காட்சியினை நடத்துகிறது.

மேலும் இந்த உபகரணங்களை கொண்டு எப்படி விவசாயத்தை மேம்படுத்தலாம் என்பது குறித்தும் தமிழக முதல்வர் விவசாயிகளுடன் கலந்துரையாடி சிறப்புறையாற்றுகிறார்.

அதனைத் தொடர்ந்து அன்று மாலை தமிழக முதல்வர் மீண்டும் திருச்சியில் இருந்து விமானம் மூலம் சென்னைக்கு புறப்படுகிறார் என கூறினார்.

இந்நிகழ்வில் மாநகர செயலாளர் அன்பழகன், மாநகராட்சி ஆணையர் வைத்தியநாதன், நகர பொறியாளர் சிவபாதம், மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, துறையூர் சட்டமன்ற உறுப்பினர் ஸ்டாலின் குமார், ஒன்றிய செயலாளர் மாத்தூர் கருப்பையா, சேர்மன் துரைராஜ் மாமன்ற உறுப்பினர் புஷ்பராஜ், ராமதாஸ், பந்தல் ராமு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

# தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ அறிவிப்பு!



தஞ்சாவூர், மாவட்டக் கழக அலுவலகம், கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட கழக அவைத் தலைவர் சி. இறைவன் தலைமையில் தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் இன்று (22.07.2023 - சனிக்கிழமை) காலை 11.00 மணியளவில் நடைபெற உள்ளது.

அதுசமயம் கூட்டத்திற்கு தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர்கழக செயலாளர்கள், அணிஅமைப்பாளர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

பொருள் :
1. ஜீலை 26 திருச்சியில் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெறும் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (பில்.எல்.ஏ2) பயிற்சி கூட்டத்தில் கலந்து கொள்ளுதல்.
2.ஜீலை 27 கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தஞ்சை வருகை.
3. கழக ஆக்கப்பணிகள்.

**துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ.**
செயலாளர்
தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க.

# திருவாரூர் மாவட்டச் செயல் வீரர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அறிக்கை!



திருவாரூர் மாவட்டச் செயல் வீரர்கள் கூட்டம் 24.07.2023 திங்கள் அன்று காலை 10.00 மணிக்கு திருவாரூர் முத்துவேலர் அஞ்சுகம் அரங்கில் அவைத்தலைவர் க.தனராஜ் தலைமையில் நடைபெற இருக்கிறது.

அது சமயம் மாவட்டக்கழக நிர்வாகிகள், ஒன்றிய,நகர,பேரூர் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்

பொருள் : ஜீன்.26 திருச்சியில் நடைபெற இருக்கும் மண்டல வாக்குச்சாவடி முகவர்கள் பயிற்சி பாசறை

கூட்டுறவு சங்க தேர்தல் மற்றும் கழக ஆக்கப் பணிகள்

**பூண்டி கே.கலைவாணன்**
செயலாளர்
திருவாரூர் மாவட்ட தி.மு.க.




சென்னை சுற்றுலா வளாகத்தில் சுற்றுலா பயண பேருந்துகள் மற்றும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகளின் அறைகள் முன்பதிவு செய்வதற்கான புதுப்பிக்கப்பட்ட முன்பதிவு அலுவலகத்தினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று முன்தினம் (20.07.2023) திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி கலந்து கொண்டார்.



திருச்சி மாவட்ட பள்ளி மாணவச் செல்வங்களுக்கு மொத்தம் 20,399 விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்வினை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பொன்மலைபட்டி பகுதியில் அமைந்துள்ள புனித வளனார் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நிகழ்வினை தொடங்கி வைத்து விழா சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர், மா.பிரதீப் குமார், மண்டலம் 3 மு.மதிவாணன், ஜி.திவ்யா, இ.எம்.தர்மராஜ், கோ.ரமேஷ், திருமதி. செல்வி மற்றும் பள்ளியின் ஆசிரியர் தலைமை ஆசிரியர்கள் மாணவ – மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.